# பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

1. வாழ்ற இடத்தச் சுத்தமா வச்சுக்கணும்.

   வாழ்கின்ற இடத்தைச் சுத்தமாக வைக்க வேண்டும்.

2. மழக்காலத்துல வெண்ணி குடி.

   மழைக்காலத்தில் வெந்நீர் குடி.

3. பொண்ணுங்க போட்டுக்குற ஆபரணத்துல ஒண்ணு வளயல்.

   பெண்கள் அணியும் ஆபரணங்களில் ஒன்று வளையல்.

4. இன்னைக்கி வெயில் ரொம்ப அடிக்கி.

   இன்றைக்கு வெயில் அதிகமாக இருக்கின்றது.

5. நா தினமும் இரண்டு தடவ பல் விலக்குவேன்.

   நான் தினமும் இரண்டுமுறை பல் துலக்குவேன்.

6. ஏன் மெதுவா கடிதம் எழுதுற?

   ஏன் மெதுவாக கடிதம் எழுதுகின்றாய்?

7. வேடன் ஒருத்தன் பறவயப் பிடிச்சிட்டு வந்தான்.

   வேடன் ஒருவன் பறவையைப் பிடித்து வந்தான்.

8. நீங்க ரெண்டு பேரும் சேந்து தான் விளயாடணும்.

   நீங்கள் இருவரும் சேர்ந்து தான் விளையாட வேண்டும்.

9. ஏன் ஒன்னுமே பேசாம இருக்கீங்க?

   ஏன் ஒன்றும் பேசாமல் இருக்கின்றீர்கள்?

10. கடற்கரையில பெரிய தென்னமரம் இருக்கு.

    கடற்கரையில் பெரிய தென்னைமரம் இருக்கின்றது.